
# அமுதக் கலசம்

## பத்தாவது ஆண்டுவிழா மலர்

1998 – 2008



ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலை

இரத்மலானை, கொழும்பு


ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலை மாணவர்கள்
24.02.2007

# அமுதக் கலசம்

# பத்தாவது ஆண்டுவிழா மலர்

## 1998 - 2008

### TENTH ANNIVERSARY COMMEMORATION SOUVENIR

*of*

### *SRI RAMAKRISHNA RELIGIOUS SCHOOL, RATMALANA, COLOMBO*



## ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலை

## இரத்மலானை

# பொருளடக்கம்


1. வாழ்த்துச் செய்தி - ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் - - - - - - - - - 03
2. வாழ்த்துச் செய்தி - ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்த மகராஜ் - - - - - - - - - 04
3. ஆசியுரை - ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தா மகராஜ் - - - - - - - - - 05
4. அறிமுகம் - திருமதி சத்தியவதி இராசேந்திரம் - - - - - - - - - 06
5. முதலாவது தசாப்தம் கண்ட ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலை - - - - - - - 07
6. இரத்மலானை ஸ்ரீராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலையின் செயற்பாடுகள் - - - - - - - 10
7. அன்பே சிவம் - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - 11
8. தன்னம்பிக்கை - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - 12
9. வர்ணப் படங்கள் கூறும் செய்திகள்
10. உயிர்களிடத்து அன்பு வேண்டும் - - - - - - - - - - - - - - - - - - 13
11. மாணவரின் வளர்ச்சியில் அறநெறிப் பாடசாலையின் பங்களிப்பு - - - - - - - - - 15
12. அன்னை சாரதாதேவி - - - - - - - - - - - - - - - - - - - - - - 17
13. தசாப்தத்தில் ஒரு வளர்ச்சி - - - - - - - - - - - - - - - - - - - - - 20
14. பாராட்டுப் பெறும் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் - - - - - - - - - - 20
15. இந்து சமய மறுமலர்ச்சிக்கு சுவாமி விவேகானந்தர் ஆற்றிய சேவை - - - - - - - 21
16. ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலையின் முக்கிய நிகழ்வுகள் - - - - - - - - - 24


* * * * * * * *


நூலின் பெயர் : அமுதக் கலசம் (பத்தாவது ஆண்டுவிழா மலர்)

வெளியீடு : அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாளர்,
ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலை, இரத்மலானை

பதிப்பு : கலியுகம் 5110 (சர்வதாரி வருடம்) ஆனி மாதம் [2008 ஜூன்]

பக்கங்கள் : 24 + 4

அச்சுப்பதிப்பு : கௌரி அச்சகம்,
207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து வீதி, கொழும்பு 13.
தொலைபேசி: (011) 2432477 தொலைநகல்: (011) 2423433


* * * * * * * *


ஆசிரிய மலர்க்குழுவினர்: ந. கார்த்திகேயன், அ. சம்பந்தன், சு. பக்திரிஷிகேசன்

மாணவ மலர்க்குழுவினர்: சந்திரபோஸ் சிவபாலன், இராமகிருஷ்ணர் விவேக்
கணேசன் லியனராஜ் நாகேஸ்வரன் மயூரன்
பொன்னம்பலம் அகிலா செல்வநாயகம் செல்வமதி
சந்தனம் சிந்துஜா செல்வநாயகம் செல்வநிதி
குலசேகரம் இலக்சுமி


* * * * * * * *

# இராமகிருஷ்ண மிஷன்
# விவேகானந்த கல்லூரி
மைலாபூர், சென்னை 4

## வாழ்த்துச் செய்தி

இரத்மலானையில் உள்ள கொழும்பு இந்துக் கல்லூரியில் இயங்கும் ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலையின் பத்தாண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

அறநெறிக் கல்வியின் அவசியமும், முக்கியத்துவமும் வெகுவாக உணரப்படக் கூடிய இன்றைய கால சூழலில், இந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இயங்கிவரும் அறநெறிப் பாடசாலைகளின் செயற்பாடுகள் மிகவும் பாராட்டத்தக்கன என்பதில் ஐயமில்லை. ஆனால் ஒரு அறநெறிப் பாடசாலையின் வெற்றி என்பது அப் பாடசாலை பெற்றுள்ள தளபாடங்களையோ அல்லது வேறு எந்த வளங்களையோ பொறுத்து அமைவதில்லை. மாறாக அப் பாடசாலையை வழிநடத்திச் செல்லும் அதன் ஆசிரியர்களின் ஆத்மார்த்தமான சமய ஈடுபாட்டையும், குழந்தைகளின் வளர்ச்சியில் அவர்கள் கொண்டிருக்கும் அக்கறையையும் பொறுத்தே அமைகிறது.

பத்தாண்டுகள் நிறைவுபெற்று சீருடன் இயங்கிவரும் இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலையைத் தாபித்து, அதனைக் கண்ணும் கருத்துமாகக் கட்டிக் காத்துவரும் திருமதி சத்தியவதி இராசேந்திரம் அவர்களை இந்த இனிய தருணத்தில் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். இப்புனித பணியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் அவருக்குள்ள ஆர்வம், எந்த ஒரு தடை அல்லது சிரமத்தையும் கடந்து செல்லக்கூடிய சக்தியை அவருக்கு அளித்துள்ளது எனலாம். இந்த நற்காரியத்தில் எல்லா வகையிலும் ஒத்தாசைகள் புரிந்து, இப் பாடசாலை சிறப்புடன் இயங்க உதவிவரும் மற்ற ஆசிரியர்களுக்கும், ஏனையோருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப் பாடசாலை தொடர்ந்து தனது நற்பணியை முன்னெடுத்துச் செல்ல பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரது திருவருள் துணைநிற்க இத் தருணத்தில் பிரார்த்திக்கிறோம்.

**சுவாமி ஆத்மகனானந்தா**
செயலாளர்,
விவேகானந்தக் கல்லூரி - சென்னை

**இராமகிருஷ்ண மிஷன் (இலங்கைக் கிளை)**
**40, இராமகிருஷ்ணா வீதி, கொழும்பு - 6.**
தொலைபேசி: 011-2588253, 5513805

# வாழ்த்துச் செய்தி

இரத்மலானை இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலையின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த அறநெறிப் பாடசாலையை நடாத்திவரும் திருமதி சத்தியவதி இராசேந்திரம் அவர்கள் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலையில் ஆசிரியராக பணிபுரிந்து கொண்டிருந்த நேரத்தில் அவரது வசிப்பிடமான சொய்சாபுரப் பகுதியிலிருந்து வரும் மாணவர்கள் மிக நீண்ட தூரம் பிரயாணம் செய்து வருவதாலும், இங்கு நிலவிய இடப்பற்றாக் குறை காரணமாகவும் சொய்சாபுரப் பகுதியிலே ஒரு அறநெறிப் பாடசாலையை ஆரம்பிக்க நினைத்தார். ஈற்றில் இரத்மலானை இந்துக் கல்லூரியில் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. சொய்சாபுரத்திலிருந்து இப்பாடசாலைக்கு வரும் மாணவர்களுக்கு தானே போக்குவரத்து வசதிகளை செய்து கொடுப்பதும் குறிப்பிடத்தக்கது. இரத்மலானை இந்துக் கல்லூரியில் பெற்றோரை இழந்த மாணவர்ளுக்கு இல்லம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அந்த மாணவர்களும் இந்த அறநெறிப் பாடசாலையில் இணைந்து கொண்டனர். பத்து ஆண்டுகளில் ஆசிரியர் வரவு குறைந்த காலத்திலும் தானே தனியாக வகுப்புகளை நடாத்தி இப்பணியை திருமதி இராசேந்திரம் அவர்கள் முன்னெடுத்து வந்துள்ளார். எத்தனையோ இடையூறுகள் வந்த போதும் மனம் தளராமல் தொடர்ந்து செயலாற்றிவரும் அவரது பணி போற்றுதலுக்குரியது. மேலும் இப்பணியில் அவருக்கு ஆதரவு நல்கிவரும் அனைவருமே பாராட்டிற்குரியவர்கள்.

ஆற்றலும் ஊக்கமும் பொங்கித் ததும்ப, அன்றலர்ந்த மலர்களைப் போல் புத்துணர்ச்சியுடனும், உள்ளத் தூய்மையுடனும் விளங்கும் மாணவச் செல்வங்களுக்குப் பண்புக் கல்வி புகட்டுவதன் அவசியத்தை உணர்ந்து அரும் பணியாற்றிவரும் இந்த அறநெறிப் பாடசாலையின் பணி மேலும் வளரட்டும். இப்பாடசாலையிலிருந்து நற்பண்பு மிக்க ஒழுக்க சீலர்கள் பலர் உருவாகுவார்களாக. இதுவே பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், தூய அன்னை, ஸ்ரீசாரதாதேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரது தாமரைத் திருவடிகளில் எனது இதயபூர்வமான பிரார்த்தனை ஆகும்.

**சுவாமி இராஜேஸ்வரானந்த**

இராமகிருஷ்ண மிஷன் (இலங்கைக் கிளை)
40, இராமகிருஷ்ணா வீதி, கொழும்பு - 6.
தொலைபேசி: 011-2588253, 5513805

# ஆசியுரை

இரத்மலானை, ஸ்ரீராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலையின் பத்தாவது ஆண்டு நிறைவுவிழா நடைபெற இருப்பதையும், அதை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பட இருப்பதையும் அறிந்து மகிழ்வுறுகிறேன். இந்த இரு நிகழ்ச்சிகளும் சீரும், சிறப்புடன் நிறைவேற எல்லாம் வல்ல இறைவனின் அருளையும் ஆசியையும் வேண்டுவதோடு, என்னுடைய நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும். அத்தகைய நம்பிக்கை, உள்ளே இருக்கும் தெய்வீகத்தை, வெளியே வரவழைக்கிறது. நீ எதையும் சாதிக்க முடியும். அளவுகடந்த ஆற்றலை வெளிப்படுத்த போதுமான அளவிற்கு ஒவ்வொருவரிடமும் சக்தி இருக்கிறது. அதை முயற்சி செய்து வெளிக் கொணர்வதே நமது கடமை" என்று சுவாமி விவேகானந்தர் கூறினார். திருமதி சத்தியவதி இராஜேந்திரம் அவர்களின் தனி முயற்சியால் இந்த அறநெறிப் பாடசாலையை ஆள்பலம், பொருளாதார பலம் ஆகியவை போதியளவு இல்லாத போதும், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் வாக்குப்படியும், 'இளமையில் கல்', 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற கூற்றுக்கேற்பவும், வையத்துள் வாழ்வாங்கு வாழ இளம் தலைமுறையினருக்கு வழிகாட்ட வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடனும், செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். இத்தகைய குறிக்கோளோடு அயராது உழைத்துக் கொண்டிருக்கும் அன்னாருக்கு எல்லாம் வல்ல இறைவன் தன் அருளையும் ஆசியையும் வழங்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியபடி ஈரமான செங்கல்லில் முத்திரை பதித்தால் அது நிலைத்து நிற்கும். காய்ந்த செங்கல்லில் முத்திரை குத்த முடியாது. அப்படிப் பதிக்க முயற்சித்தாலும் செங்கல் உடைந்துவிடும். ஆகையால் இந்த இளம் வயதில் மாணவர்களும் எவ்வளவு கற்க முடியுமோ அதைக் கற்று வாழ்க்கையில் கடைப்பிடித்து என்றும் மகிழ்ச்சியுடனும் அமைதியுடனும் வாழ அருளுமாறு இறைவனை வேண்டுகிறேன்.

18.06.2008
கொழும்பு 6

**சுவாமி சர்வருபானந்தா**
தலைவர்,
இராமகிருஷ்ண மிஷன் (இலங்கைக் கிளை)

ௐ

# அறிமுகம்

"ஒருவன் நல்ல எண்ணங்களையே எண்ணி, நற்செயல்களையே செய்து வந்தால், அவனது மனதில் நல்லனவையே பதிந்து, அவை அவனையறியாமலேயே அதைப் போன்ற நல்லனவற்றைச் செய்ய அவனைத் தூண்டும். ஒருவன் ஏராளமான நல்ல செயல்களையும், ஏராளமான நல்ல எண்ணங்களையும் கொண்டிருந்தால் அவன் உள்ளத்தில் நல்லதையே செய்ய வேண்டுமென்ற தவிர்க்கமுடியாத போக்கு உண்டாகிறது. அவனாக தீயனவற்றைச் செய்ய வேண்டுமென்று விரும்பினாலும், நன்மையின் மொத்த வடிவமாக உள்ள அவனது மனது அவனை அவ்வாறு செய்யவிடாது தடுத்துவிடும். அவன் பூரணமாக நற்சுபாவங்களின் வயப்பட்டுவிடுகிறான். இவ்வாறு அமையும் பொழுதுதான் ஒரு மனிதனின் சிறந்த பண்பானது நிர்மாணிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. நீங்கள் நல்ல பண்பை நிர்மாணித்துக் கொள்ளுங்கள். அத்துடன் ஒளிமயமான, பிரகாசிக்கின்ற, என்றும் தூய்மையான உங்களது உண்மையான இயல்பை வெளிப்படுத்துங்கள். மேலும், நீங்கள் காணும் ஒவ்வொருவரையும் அக்கண்ணோட்டத்துடனேயே காண்பீர்களாக." என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

நற்பண்புகள் சிறுவர்களாக இருக்கும் போதே விதைக்கப்படல் வேண்டும். அப்போதுதான் நாம் எதிர்பார்க்கின்ற மனிதப் பண்புகளையும், விழுமியங்களையும் உடைய நல்லவர்களை உருவாக்க முடியும். இதனைக் குறிக்கோளாகக் கொண்டே இரத்மலானை ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலை கலியுகம் 5099ஆவது வருடம் (ஈஸ்வர வருடம்) தைப்பூச நாளன்று (ஆங்கில வருடம் 1998ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ம் திகதி) ஆரம்பிக்கப்பட்டது.

ஸ்ரீமத் சுவாமிகள் ஆத்மகனானந்தஜி மற்றும் இராஜேஸ்வரானந்தஜி மகராஜ்களின் தொடர்ச்சியான ஆசிகளுடனும் நெறிப்படுத்தல்களுடனும், பல தொண்டர் ஆசிரியர்களதும் சிரேட்ட மாணவர்களதும் பங்களிப்புடனும் இந்த அறநெறிப் பாடசாலை பத்து ஆண்டுகளைக் கடந்து இயங்கி வருகின்றது. இக் காலத்தில் கல்லூரி அதிபர் திரு. ந. மன்மதராஜா அவர்கள் நல்கிய ஒத்துழைப்பும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த அறநெறிப் பாடசாலையின் பத்தாண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் இச்சிறப்பு மலரில் மாணவர்களின் ஆக்கங்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஆக்கங்களைத் தந்துதவிய மாணவர்களுக்கு எமது பாராட்டுக்கள். இம் மலர் வெளிவர உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

திருமதி சத்தியவதி இராசேந்திரம்

# முதலாவது தசாப்தம் கண்ட ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலை

"இன்றைய இளைஞர்களே, நாளைய தலைவர்கள்".
"இளமையிற் கல்வி சிலைமேல் எழுத்து"

எனவே, மாணவ பருவத்திலேயே குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் நன்மை தரும் நற்பண்புகளையும், நற்சிந்தனைகளையும், நற்கருத்துக்களையும், உயர் விழுமியங்களையும் அவர்களிடத்தில் விதைத்தல் அவசியமாகிறது. இதற்காகவே சமயம் எமது வாழ்வில் இன்றியமையாததாகக் காணப்படுகிறது. ஆனால், இது கோயில் வழிபாட்டுடனும், விரதங்களை அனுட்டிப்பதுடனும், பண்டிகைகள் மற்றும் விழாக்களைக் கொண்டாடுவதுடனும் நிறைவு பெற்றுவிடுவதில்லை. அவற்றுடன், அவற்றுக்கு மேலான பண்பு வளர்ச்சியும், மாறாத அன்பும் குடிகொள்ளும்போது மட்டும்தான் சமயம் அர்த்தமுடையதாகின்றது. தற்காலத்தில், அர்த்தமுள்ள வாழ்க்கைக்கு வழிசமைக்கும் களங்களாக அறநெறிப் பாடசாலைகள் திகழ்கின்றன.

அந்த வகையில் இரத்மலானை பிரதேசத்தில் பரந்து வாழும் இந்து மாணவர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாக ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலை திகழ்கிறது. 1998ல் ஆரம்பிக்கப்பட்டு, நல்ல மாணவர்களை உருவாக்கும் அயராத முயற்சியுடன் இப் பாடசாலை பத்து ஆண்டுகளைப் பூர்த்திசெய்து இயங்கிவரும் இத்தருணத்தில், அது ஆரம்பிக்கப்பட்ட பின்னணியையும், நடந்து வந்த பாதையையும் மீட்டுப் பார்ப்பது பொருத்தமமானதே.

இரத்மலானைப் பிரதேச மாணவர்களுக்கு போதிய சமய, ஆன்மிக வழிகாட்டல்கள் இல்லாத நிலையைக் கண்ணுற்ற, கொழும்பு இராமநாதன் இந்து மகளிர்க் கல்லூரியின் ஆசிரியாரகவும், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாடசாலையின் ஆசிரியராகவும் அக்காலத்தில் கடமையாற்றிய திருமதி சத்தியவதி இராசேந்திரம் அவர்கள், தனது மனக் கவலையை அவ்வப்போது இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜி மகராஜ் அவர்களுக்குக் கூறுவது வழக்கம். சுவாமிஜி அவர்களின் நெறிப்படுத்தலுக்கமைய இரத்மலானையில் ஓர் அறநெறிப் பாடசாலையை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பொருத்தமான இடத்தைத் தேடிக் கொண்டிருந்த போது, இராமகிருஷ்ண சாரதா சமிதியின் செயலாளரான செல்வி வ. கணபதிப்பிள்ளை அவர்களின் முயற்சியால், இரத்மலானையிலுள்ள கொழும்பு இந்துக் கல்லூரியில் சனிக்கிழமை தோறும் அறநெறிப் பாடசாலையை நடாத்துவதற்கான அனுமதி கல்லூரியின் அதிபர் திரு. ந. மன்மதராஜன் அவர்களிடமிருந்து பெறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, கலியுகம் 5099வது வருடம் (ஈஸ்வர வருடம்) தைப்பூச நாளன்று (ஆங்கில வருடம் 1998ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ம் திகதி) ஸ்ரீமத்

சுவாமி இராஜேஸ்வரானந்தஜி அவர்களினால் ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. ஸ்ரீ இராமகிருஷ்ணர், அன்னை சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகிய மூவரினதும் திரு-வுருவப்படங்கள் எடுத்துவரப்பட்டு, சுவாமிஜி அவர்கள் மங்கல தீபம் காட்ட, பிரார்த்தனைகள் நடைபெற்றன. சுவாமிஜி, செல்வி வ.கணபதிப்பிள்ளை அம்மா ஆகியோரது ஆசிகளுடன் அப்புனித தினத்தில் அறநெறி வகுப்புக்கள் முப்பத்-தைந்து மாணவர்களுடன் ஆரம்பமாயின.

ஆரம்ப காலத்தில் சொய்சாபுரம் மற்றும் பாடசாலையைச் சூழவுள்ள பிரதேச மாணவர்களே அதிகளவில் அறக் கல்வி கற்று வந்தனர். பின்னர், இரத்மலானை இந்துக் கல்லூரியின் ஆண்கள் விடுதி 1998ம் ஆண்டிலும், பெண்கள் விடுதி 2003ம் ஆண்டிலும் ஆரம்பிக்கப்பட்ட காலங்களிலிருந்து அங்கு தங்கிப் படிக்கும் மாணவர்களே பெருமளவில் வருகை தருகின்றனர். கடந்த 10 வருடங்களில், 1999ம் ஆண்டிலேயே உயர் எண்ணிக்கையான 135 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர். இன்று 110க்கு மேற்பட்ட மாணவர்கள் இங்கு அறக்கல்வி கற்று வருகின்றனர். தரம் 3 முதல் 9 வரையான மாணவர்களே அறநெறி வகுப்புகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். கடந்த சில வருடங்களாக சொய்சாபுரம் மற்றும் சூழவுள்ள பிரதேச மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டமை ஒரு பின்னடைவே.

ஆரம்ப காலங்களில், சனிக்கிழமை தோறும் காலை 9:00 மணி முதல் 11:30 வரை வகுப்புக்கள் நடைபெற்று வந்தன. அண்மைக் காலத்தில், அனைத்துத் தேவைகளையும் கருத்திற் கொண்டு, காலை 9:30 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை அறநெறி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

"அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது" என்பது முதுமொழி. அவ்வகையில், ஆரம்ப காலம் முதல் இன்று வரை, பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்த போதும், எமது அறநெறிப் பாடசாலையை தனிநபராக நின்று தொடர்ந்து நடாத்தி வரும் பெருமை திருமதி சத்தியவதி இராசேந்திரம் அவர்களையே சாரும். அவருக்குத் தேவையான ஆலோசனைகளையும் ஊக்கத்தினையும் இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் இருவரும் தொடர்ந்து வழங்கி வந்துள்ளனர். சுவாமி இராஜேஸ்வரானந்தஜி அவர்கள் பலவாரங்கள் தொடர்ச்சியாக வருகை தந்து, மாணவர்கள் முறைப்படி வேத மந்திரங்களை உச்சரிக்கவும், இனிய பஜனைகளைப் பாடவும் பயிற்சியளித்தமை குறிப்பிடத்-தக்கது. அத்துடன் சுவாமிஜி அவர்கள் மாணவர்களுக்குப் பொருத்தமான கதைகளைக் கூறி, அவர்களின் பண்பு வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டி வந்தார். மேலும் அறநெறிப் பாடசாலை அடைந்த வளர்ச்சியில் எமது இந்துக் கல்லூரியின் அதிபர் வழங்கிய ஒத்துழைப்பும் கணிசமானது.

அறநெறிப் பாடசாலை தொடர்ந்து நடைபெற அவருக்குத் துணையாக பல ஆசிரியர்கள், தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும், அவ்வப்போது உதவி

செய்து வந்துள்ளனர். அவர்களில் ஆரம்ப காலத்தில் சேவையாற்றிய திரு. அருளானந்தம், திரு. திருமதி பத்மராஜா, திரு. திருமதி சங்கரநாராயணசர்மா, திருமதி தர்மகுலசிங்கம் அவர்களையும், 1999ம் ஆண்டு முதல் சேவையாற்றிய திரு. ந. கார்த்திகேயன் (விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்), திருமதி பாக்கியராஜா (அதிபர், கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை), திருமதி சச்சிதானந்தம் (விடுதி மேற்பார்வையாளர்) அவர்களையும், 2000ம் ஆண்டு முதல் சேவையாற்றிய திரு. எஸ். விக்னராஜா, திருமதி தயாநிதி மோகன் அவர்களையும் குறிப்பிட்டுக் கூறலாம். அத்துடன் விழாக்களுக்கு மாணவர்களைத் தயார் செய்வதிலும், பண்ணிசை பாடல்களைப் பயிற்றுவிப்பதிலும் அவ்வப்போது உதவிவரும் திருமதி குமாரசுவாமி (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை), செல்வி சஜீவி (சங்கீத ஆசிரியை) அவர்களதும், 2003ம் ஆண்டில் அறநெறிப் பாடசாலை மாணவிகளுக்கு சீருடை வழங்கியதுடன் சில காலம் மாணவரின் ஒழுக்கத்திலும் வரவிலும் கவனம் செலுத்திய சொய்சாபுர இந்து மன்ற உறுப்பினர்கள் திரு. குழந்தைக்குமரன், திரு. சுப்பிரமணியம் அவர்களதும் பணிகள் குறிப்பிடத்தக்கவை. இடைப்பட்ட காலத்தில், சில வருடங்கள் செல்வன் மு. இராஜரட்ணம் அவர்கள் எமது விடுதியிலேயே தங்கியிருந்து, மாணவர்களை வழிப்படுத்தியதுடன் அறநெறிப் பாடசாலையையும் சிறப்பாக நடாத்துவதில் ஆற்றிய பணி சிறப்பானது.

ஆரம்ப காலம் முதல் இன்று வரை நிரந்தரமான அல்லது தொடர்ந்து வருகைதரக்கூடிய ஆசிரியர்கள் கிடைக்காமையே எமது அறநெறிப் பாடசாலை சந்தித்து வரும் மிகப்பெரிய சவால் ஆகும். சில நேரங்களில் திருமதி இராசேந்திரம் அவர்களே தனியொருவராகவும், வேறுசில சந்தர்ப்பங்களில் ஒருசில உயர் வகுப்பு மாணவர்களின் துணையுடனும் இந்த அறநெறிப் பாடசாலையை நடாத்தி வந்துள்ளார். இனிவரும் காலங்களில் தொடர்ந்து வரக்கூடிய ஆசிரியர்கள் ஒரு சிலராவது கிடைப்பர் என நம்புவோம்.

- செல்வன் சந்திரபோஸ் சிவபாலன், க.பொ.த. உயர்தரம் (2006)

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்துக்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தன்னுடைய சுயவலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை.

பொறாமையையும், ஆணவத்தையும் விட்டுவிடு. பிறருக்காகக் கூடி உழைக்கக் கற்றுக்கொள். நமது நாட்டிற்கு மிகவும் தேவையானது இதுவே.

எழுமின்! விழிமின்!! கருதிய காரியம் கைகூடும் வரை அயராது உழைமின்!!!

- *சுவாமி விவேகானந்தர்*

# இரத்மலானை ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலையின் செயற்பாடுகள்

இரத்மலானைப் பகுதியில் வாழும் இந்து மாணவர்களின் மனதில் அற-நெறிக் கருத்துக்களை உரிய காலத்தில் பதித்து அவர்களின் சிறந்த எதிர்-காலத்திற்கு அத்திவாரமிடும் பணியைச் செய்யவென 1998ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ம் திகதி தைப்பூசத் திருநாளன்று 35 மாணவர்களுடன் இரத்மலானை இந்துக் கல்லூரியில் ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்-பட்டது. இந்த அறநெறிப் பாடசாலையின் குறிக்கோள்களாகிய பண்பு வளர்ச்சி, சமய விழுமியங்களை அறிந்து அவற்றைக் கடைப்பிடித்தல், ஆளுமை விருத்தி என்பனவற்றை எய்திடும்வகையில் அதன் செயற்பாடுகள் நிர்ணயிக்கப்படுகிறது.

சனிக்கிழமை தோறும் காலை 09:30 மணி முதல் நண்பகல் 12:00 வரை நடைபெறும் இப்பாடசாலையில், 09:30 முதல் 10:30 வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகிறது. இதில் அர்ச்சனை மற்றும் ஆரத்தி, வேத மந்திரங்கள் ஓதுதல், பொன்மொழி சொல்லுதல், தேவாரம் மற்றும் புராணம் ஓதுதல், பஜனை பாடுதல், தியானம் என்பன இடம்பெற்று வருகின்றன. தொடர்ந்து நடைபெறும் சிவபூசையில், அனைத்து மாணவர்களும் மகாமிருத்யுஞ்ஜய மந்திரத்தை ஓத, ஒவ்வொரு மாணவரும் சிவலிங்கத்திற்கு மலர் சாத்தி வணங்குவர்.

பின்பு 10:30 முதல் 12:00 மணி வரை, மாணவர்கள் வகுப்பிற்கேற்ப சிறு குழுக்களாகக் கூடி சமயக் கருத்துக்களைக் கற்று வருகின்றனர். நீதி நூல்கள், கதைகள், பெரியோர் வாழ்வில் நடைபெற்ற சம்பவங்கள், போன்றனவற்றின் மூலமாக ஆசிரியர்கள் அறநெறிக் கருத்துக்களை மாணவர்களுக்கு விளக்கி வருகின்றனர். இதன் மூலம் தாய், தந்தை, குருவை வணங்குதல், மூத்தோரிடம் மரியாதை, உயிர்களிடத்தில் அன்பு, நேர்மை, வாய்மை, பணிவு போன்ற நற்பண்புகளுடன் தன்னம்பிக்கை, கடவுள் நம்பிக்கை என்பனவும் வளர்க்கப்படுகின்றன.

இடத்தைச் சுத்தம் செய்தல், சுவாமிப்படங்களை வைத்து அலங்கரித்தல் போன்ற முன்னேற்பாடுகளையும், அறநெறிப் பாடசாலை முடிவடைந்ததும் வகுப்பறைகளைச் சுத்தம் செய்து மீள-ஒழுங்குபடுத்தல் போன்றனவற்றையும் மாணவர்களே செய்து வருகின்றனர்.

இவை எமது அறநெறிப் பாடசாலையின் வாராந்தச் செயற்பாடுகளாகும். இவற்றுடன் வருடந்தோறும் ஆண்டுவிழா, கிருஷ்ண ஜெயந்தி, நவராத்திரி விழா என்பன சிறப்பு விழாக்களாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

அறநெறிப் பாடசாலையின் ஆண்டு விழாவானது வருடாவருடம் பங்குனி / சித்திரை மாதத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் ஜெயந்தியுடன் விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் போது, 'மாணவர்கள் நல்ல கருத்துக்கள்,

பெரியார்களின் வாழ்க்கை உணர்த்தும் போதனைகள் போன்றனவற்றை பேச்சு, பாட்டு, நாடகம், நடனம், உரையாடல்கள் மூலம் எடுத்துக்கூறி வருகின்றனர். அன்றைய தினம் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களும் பெற்றோர்களும் இணைந்து, வருகை தந்தோருக்கும் விடுதி மாணவர்களுக்கும் மதிய போசனம் வழங்கி வருகின்றனர்.

புரட்டாதி மாதத்தில் கிருஷ்ண ஜெயந்தி விழாவுடன் வருடாந்த ஆன்மிகக் கண்காட்சியும் இடம்பெற்று வருகிறது. கிருஷ்ண ஜெயந்தி விழாவின் போது, கீழ்ப் பிரிவு மாணவர்கள், ஔவையார், பாரதியார், நாயன்மார்கள், திருவள்ளுவர், சுவாமிஜி போன்ற சமயப் பெரியார்களின் வேடம் தரித்து, அவர்கள் அருளிய ஓரிரு போதனைகளைக் கூறிச் செல்வது அனைவரது உள்ளத்தையும் கவரும் ஒரு நிகழ்ச்சியாகும். அத்துடன் யோகாசனக் காட்சிகள், நாடகம், நடனம், பஜனை போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெறுவது வழக்கம்.

தொடர்ந்து வரும் நவராத்திரி காலத்தில் சிறப்பு வழிபாடுகள், பிரார்த்தனைகள், பஜனைகள் வருடாந்தம் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் மாணவர்களிடையே போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசுகளும் ஆன்மிக நூல்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த விழாக்களில் மாணவர்களின் சுய ஆற்றல் வெளிப்பாடுகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. அத்துடன் மேடை அலங்காரம் முதல் விழாக்களுக்கான சகல ஏற்பாடுகளையும் மாணவர்களே முன்னின்று செய்து வருவது சிறப்பம்சம் ஆகும்.

- செல்வநாயகம் செல்வமதி - க.பொ.த. உயர்தரம்

## அன்பே சிவம்

ஏற்றிய தீபங்கள் அணையலாம் செதுக்கிய சிற்பங்கள் மறையலாம்
வரைந்த ஓவியம் அழியலாம் ஆனால் அன்பு மட்டும் அழியாது
அன்பே சிவமாக அதுவே தவமாக அவனி முழுவதும் ஒளியாக
பெருக்கிடப் பெருகுமே பேரானந்தப் பெரு வாழ்வு

அன்னையின் வடிவம் அன்பு
தூய்மையின் வடிவம் அன்பு
தாய்மையின் வடிவம் அன்பு
நேர்மையின் வடிவம் அன்பு

இவ்வகிலத்தில் அன்புக்கும் வெற்றி பண்புக்கும் வெற்றி
அன்பே சிவம் இதுவே இறைவன் கொடுத்த வரம்
பண்பின் மூலம் மனதை அறியலாம்
அன்பின் மூலம் சிவபதத்தை அடையலாம்

****

# தன்னம்பிக்கை

மானிடனாய் பிறந்த யாவருக்கும் துணை தன்னம்பிக்கை
தன்னம்பிக்கை யுடையோர் என்றும் வீரர்களே
தரணியிலே உயர்ந்து நின்ற தவ மக்கள் யாவரிடமும்
தழைத்தோங்கி வியாபித்து நின்றது தன்னம்பிக்கை
என்றென்றும் வெற்றிக்கு வித்தாகும் தன்னம்பிக்கை - அது
இல்லையேல் ஏனிந்த மானிட வாழ்க்கை?

இலைமறை காயாகவே வாழ்வு அஸ்தமித்துவிடாது
முன்வந்து வெற்றி நடை போடத் தன்னம்பிக்கை
மனதை அடக்கி நானிலத்தை வென்று நீதி நாட்டி
தர்மம் காத்திட என்றும் வேண்டும் தன்னம்பிக்கை
பிறகேன் மானிடா மற்ற அவநம்பிக்கை? - அது விலக்கி
வெற்றிநடை போடு தன்னம்பிக்கையுடன்!

எழுதும் வரலாறும் உன்னாலே தான்
பொழியும் மழைகூட உன் தன்னம்பிக்கைக்குத் தான்
சிதைந்து போவதற்கு நீ பிறக்கவில்லை மானிடா
சிதறுபவர்களைச் சேர்ப்பதற்கே நீ பிறந்தாய்
விடியலை நோக்கிய உன் வெற்றிப் பயணத்திற்கு
விளக்கொளியாய் நிலைத்து நிற்கும் தன்னம்பிக்கை
தயக்கம் ஏன் மானிடா? தன்னம்பிக்கையுடன் இயங்கிடு
வாழ்வில் என்றென்றும் வெற்றியே பெற்றிடுவாய்!

முயற்சி செய்வதே வாழ்வென்றால் முயற்சிக்கு
முக்கியம் தன்னம்பிக்கை
தோல்வியின் முடிவில் வெற்றி என்றால்
வெற்றிக்கு அத்திவாரம் தன்னம்பிக்கை
தன்னம்பிக்கை இன்றி வெற்றி இல்லை
தன்னம்பிக்கை இன்றி மனிதன் இல்லை
தன்னம்பிக்கை இன்றி உலகமே இல்லை
தன்னம்பிக்கையே நல்வாழ்வுக்கு ஆதாரம்!

- சதாசிவம் கோபிகா, தரம் 9

நம்பிக்கை நம்பிக்கை நம்மிடத்தில் நம்பிக்கை. நம்பிக்கை நம்பிக்கை கடவுளிடத்தில் நம்பிக்கை, இதுவே மகிமை பெறுவதன் இரகசியமாகும்.

– *சுவாமி விவேகானந்தர்*

# அறநெறிப் பாடசாலை மாணவர்களின் செயற்பாடுகள்






விழாக்களுக்கு மாணவர்கள் செய்யும் அலங்காரங்கள்







அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வருடாந்த ஆன்மிகக் கண்காட்சி

# அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள்



ஆர். நவநீதன்



வ. ராதிகா



வை. ரம்யா



ரேகன்



புஸ்பராஜா



எஸ். சுஸ்மிதா



டிரோசினி



கிருஷாந்தி



நிமாலினி



புஷ்பராஜ்



ச. புல்சான்



ச. சாந்தன்



துஷாந்தி



டயஸ் குமார்



டிலான்



பவதாரணி




சாந்த சஞ்சீவ



கே. சூரியகுமார்

# அறநெறிப் பாடசாலையின் விழாக்கள்







சிறப்பு விழாக்களின் போது பிரதம, சிறப்பு விருந்தினர்களாகச் சிறப்பிக்கும் இராமகிருஷ்ண மிஷன் சுவாமிஜிகள் ஆத்மகனானந்தஜி மகராஜ், இராஜேஸ்வரானந்தஜி மகராஜ், சர்வரூபானந்தஜி மகராஜ் மற்றும் திரு. ந. மன்மதராஜா (அதிபர்), செல்வி வ. கணபதிப்பிள்ளை (பொருளாளர், இராமகிருஷ்ண சாரதா மிஷன்)






விழாக்களின் போது மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள்


ஸ்ரீ இராமகிருஷ்ண அறநெறிப்பாடசாலை
இரத்மலானை
WE C ME

## உயிர்களிடத்து அன்பு வேண்டும்

இவ்வுலகில் பல்வகையான உயிரினங்கள் உள்ளன. மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் என அவை எண்ணிலடங்காதவை. யாவற்றுள்ளும் சிறந்தது மனித இனமே. மனிதனை மனிதனாக வாழ வைக்கும் நற்குணங்களுக்கும் நற்செயல்களுக்கும் அடிப்படையாக விளங்குவது அன்பு. கொடுக்கக் கொடுக்க குறையாத பெருஞ்செல்வம் அன்பு ஆகும்.

பெற்றோர், பிள்ளைகள், சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் என நம்முடன் உறவு கொண்டவர்கள் மீது வைக்கும் அன்பு காலப்போக்கில் உயிர்கள் எல்லாவற்றையும் நேசிக்கச் செய்கிறது. மனிதன் உயிர்களிடத்து காட்டுகிற கருணையே சீவகாருண்யம் எனப்படும். அன்பின் அடித்தளத்திலேயே அக்கருணை உருவாகிறது. இறைவனை நேசிப்பது போல அவரது படைப்புக்களான ஏனைய உயிர்களையும் நேசிப்பது சிறந்த பண்பாகும். அனைத்து உயிர்களிடத்தும் நாம் அன்பும் கரிசனையும் காட்ட வேண்டும். தனது உயிரைப் பாதுகாப்பது போல் பிற உயிர்களையும் பாதுகாக்கும் மனிதன் மனிதருள் மாணிக்கம் எனப் போற்றப்படுகிறான்.

எமது வீடுகளில் ஆடு, மாடு, நாய் போன்ற பிராணிகளை விரும்பி வளர்க்கிறோம். அவற்றிலும் எம்மை அறியாமலே அன்பும் இரக்கமும் ஏற்படுகின்றது. அவற்றிற்கும் எம்மைப் போல் பசி, தாகம், நோவு போன்றவை இருக்கின்றன என்பதை உணர்ந்து அன்பு காட்ட வேண்டும். அவைகளுக்கு எம்மைப் போல் உணவைக் கேட்டு வாங்கிச் சாப்பிட முடியுமா? எனவே அவை பசித்திருக்க பார்த்துக் கொண்டிராது அவற்றிற்கு வேளா வேளைக்கு உணவு கொடுக்க வேண்டும். அவை வெயிலிலும் மழையிலும் துன்புறாத வகையில் தங்குமிடங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும். எமக்கு சிறு சுகவீனம் வந்தால் எவ்வளவு துன்பப்படுகின்றோம்! அது போன்றே மற்றைய உயிரினங்களும் துன்பப்படும் என்பதை உணர்ந்து, அவற்றுக்கு நோய் நொடிகள் வந்தால் உரிய வைத்தியம் செய்து பராமரிக்க வேண்டும்.

வானிலே சுதந்திரமாகப் பறந்து திரியும் கிளி, புறா போன்ற பறவைகளை கூட்டில் அடைத்து துன்புறுத்துவது பாவமான செயலாகும். கூண்டில் அடைக்கப்பட்ட ஒரு குருவிக்கு எவ்வளவு தான் பால் பழம் கிடைத்தாலும், அது பறந்து திரிந்து நண்பர்களுடன் சேர்ந்து மரத்திலிருக்கும் பழங்களைக் கொத்தித் தின்னும் சுவை, கூண்டிலிருக்கும் போது கிடைக்காது. சிறுவர்கள் தும்பி, வண்ணத்துப்பூச்சி, ஓணான் போன்றவற்றை பிடித்து விளையாடுவதில் விருப்பம் கொள்வர். ஆனால் அவ்வாறு செய்வதால் அவை துன்புறுகின்றன என்பதை உணர்ந்து அவற்றை அவற்றின் போக்கிலேயே வாழவிடுதல் சிறந்த மனிதப் பண்பாகும். காடுகளை அழிப்பது அங்குள்ள வனவிலங்குகள் இருப்பிடத்தை இழந்து, அலைந்து திரிந்து துன்பப்படக் காரணமாகிறது. அவற்றை

சுதந்திரமாக வாழ விட வேண்டும். பல நாடுகளில் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டமும், சரணாலயங்களும் ஆக்கப்பட்டிருப்பது சீவகாருண்ணியம் கருதியே ஆகும்.

அன்பு நிறைய உடையவர்கள் மேலோர் என பாரதியார் பாடியுள்ளார். ஔவையார், வள்ளுவர், பாரதியார் போன்ற நம் முன்னோர்கள் அழியாப் புகழ் பெற்ற புலவர்கள் ஆவர். உயிர்களிடத்து நாம் அன்பு காட்ட வேண்டும் என்பதற் காக அவர்கள் பல கவிதைத் துளிகளை இயற்றியுள்ளனர். அவர்கள் கூறியபடி நாம் உயிர்களிடம் அன்பு காட்டவேண்டும்.

பறவைகள் தாம் முட்டையிடவும், வாழவும்தான் கூடுகள் கட்டுகின்றன. ஆனால் சிறுவர்கள் சிலர், கூடு விளையாட்டுப் பொருளென நினைத்து அதை உடைத்துவிடுவார்கள். நாம் தனியாக ஒரு வீட்டை கட்ட முடியுமா? வேறு சிலர் அதிலுள்ள குஞ்சுகளை எடுத்துச் செல்வார்கள். தாய்ப் பறவை வந்து தனது குஞ்சுகளைக் காணாது எவ்வளவு கவலைப்படும்? தாயைப் பிரிந்த குஞ்சுகளின் வேதனை எப்படியிருக்கும்? நம்மை ஒருவர் பிடித்துச் சென்று தனியாக ஓர் அறையில் அடைத்து வைத்துவிட்டால் நாம் எவ்வளவு துன்பப்படுவோம்? எமது பெற்றோர் எவ்வளவு துன்பப்படுவர்? அது போலவே அந்தக் குருவிகளும் துன்பப்படும் என்பதை உணர்ந்து கொள்வோம்.

மிருகம், பறவை, பூச்சி, புழு எதுவாக இருந்தாலும் அவை யாவும் உயிருள்ள ஜீவராசிகள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். இது வரை நாம் உயிரினங்கள் மீது அன்பு செலுத்தினோமோ இல்லையோ, இனி-யாவது நாம் உயிர்களிடத்து அன்பு செலுத்துவோமாக.

அத்துடன் சக மனிதர்களையும் நமது சகோதரர்களாகவே நினைக்க வேண்டும். ஒருவருக்கொருவர் அன்புடன் உதவி செய்து இன்பத்துடன் வாழ வேண்டும். உலகிலுள்ள எல்லா பிறவிகளிலும் உயர்ந்தது மானிடப் பிறவி. மறுபிறவியில் மனிதனாகப் பிறக்க வேண்டுமென இறைவனிடம் வேண்டுவதை விட, சக மனிதர்களிடத்தும் ஏனைய உயிரினங்களிடத்தும் அன்பு கொண்டு, அவற்றுக்கு நன்மைகள், உதவிகள் செய்வதன் மூலமே அடுத்த பிறவியை உயர்ந்த பிறவியாகப் பெற்றுக்கொள்ளலாம். அப்போதுதான் இறைவனும் நம் மேல் கருணை கொண்டு நமக்குத் தேவையானவற்றைத் தருவான்.

சிபிச் சக்கரவர்த்தி உயிர்களிடம் வைத்திருந்த அன்பைச் சோதிக்க இந்திரனும் எமனும், புறாவாகவும் பருந்தாவும் வந்தனர் என்னும் புராணக் கதையும் 'உயிர்களிடத்தில் அன்பு வைக்க வேண்டும்' என்பதையே எமக்கு உணர்த்துகிறது. 'அன்பே சிவம்' என எமது சமயம் உணர்த்துவதும் 'உயிர்-களிடத்தில் அன்பு வேண்டும்' என்பதையே. எனவே நாமும் உயிர்களிடத்து அன்பு செலுத்தி மனிதப் பிறவியின் புனிதம் பேணுவோமாக.

- செல்வி வி. பிருந்தா, தரம் 8

# மாணவரின் வளர்ச்சியில் அறநெறிப் பாடசாலையின் பங்களிப்பு

உலகில் பிறந்த எல்லோரும் ஆனந்தமாக வாழ விரும்பினாலும் சிலர் பணம், பொருள் இன்றி வறுமையில் துன்பப்படுகின்றனர். சிலர் பணம், பொருள் இருந்தும் அதனைப் பாதுகாக்கவும், மேலும் நல்ல வழியில் பயன்படுத்தவும், அதனைப் பெருக்கவும் தெரியாது துன்பப்படுகின்றனர். இவ்வாறான துன்பங்கள் யாவற்றிற்கும் காரணம் அறியாமையே.

ஆம்! அறியாமை அகன்று, நல்லறிவு, ஞானம் வரவேண்டுமாயின் அறக் கல்வி அவசியம். மனிதனின் நல் வாழ்க்கைக்கு வழிகாட்டக் கூடியது சமயக் கல்வி. வழிகாட்டல்கள் ஒருவரது வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே, அதாவது இளம் பருவத்திலேயே, வழங்கப்பட வேண்டும். மாறாக வாழ்க்கை முடியப் போகும் வயது முதிர்ந்த பருவத்தில் அல்ல. ஆகவே, எம்மைப் போன்ற இளம் பருவத்தில் உள்ள மாணவர்களின் வளர்ச்சிக்காக அறநெறிப் பாடசாலைகளை அமைத்துள்ளனர்.

பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக மாணவர்களுக்கு ஆன்மிக வளர்ச்சியும் அவசியம் என்று கருதிய நல்லுள்ளம் படைத்த ஆசிரியர்கள், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் தங்கள் பொன்னான நேரத்தை ஒதுக்கி அறநெறிப் பாடசாலைகள் நடைபெற உதவி வருகின்றனர். அவர்கள் அன்புடன் மாணவர்களை அணுகி, அறம் போதிக்கும் புராண, இதிகாசக் கதைகள் மூலமும் சமயச் செயற்பாடுகள் மூலமும் நற்சிந்தனைகளையும் நற்பழக்க-வழக்கங்களையும் மாணவர்கள் உருவாக்கிக்கொள்ள உதவி வருகின்றனர்.

மேலும், சுத்தம் பேணுதல், இன்சொல் பேசுதல், அமைதியாக இருத்தல், பெரியோரை மதித்தல், பொறுமையாக இருத்தல், உண்மை பேசுதல் போன்ற நல்லபல விடயங்களையும் கற்றுக்கொள்ள அறநெறிப் பாடசாலை உதவுகிறது. தவறு செய்பவர்கள்கூட, தத்தமது தவறுகளை உணர்ந்து, திருந்தி தூயவனாக மாறிவிட அறநெறிப் பாடசாலைகள் உறுதுணையாக இருக்கின்றன. ஆத்திசூடி, நல்வழி போன்ற சிறந்த நீதி நூல்கள் மூலம் நீதி, நேர்மை, நல்லொழுக்கம் பேணி வாழும் வழிமுறைகளை மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர்.

ஒவ்வொருவரும் தனது சமயத்தைப்பற்றிய அடிப்படை அறிவை சிறிதள-வேனும் பெற்றிருக்க வேண்டும். திருவிழாக்கள், பண்டிகைகள், சமயக் கிரியை-கள், சமயச் சடங்குகள், சமயத் தத்துவங்கள், சமயப் பெரியார்கள், சமய நடைமுறைகள் பற்றிய தெளிவும் தேவைப்படுகிறது. அறநெறிப் பாடசாலைகள் இத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன.

அறநெறிப் பாடசாலையில் செய்யும் பூஜைகள், மந்திர ஜபம், தியானம் போன்றன மாணவரின் மனவலிமையையும், கற்றல் திறனையும், ஞாபக

சக்தியையும் அதிகரிக்க உதவி செய்கின்றன என்பதில் ஐயமில்லை. அங்கு பாடும் பஜனைப் பாடல்கள் மனதுக்கு அமைதியைத் தருகின்றன.

அறநெறிப் பாடசாலையில் கொண்டாடப்படும் விழாக்கள், பண்டிகைகள், கண்காட்சிகள், அவற்றின் போது மேடையேற்றப்படும் விவாதங்கள், நடனங்கள், பேச்சுக்கள், கவிதைகள் போன்ற நிகழ்ச்சிகள் மாணவரின் பலதரப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தவும் வளர்க்கவும் பெரிதும் உதவுகின்றன.

நாம் சில நேரங்களில் எமது நேரத்தை வீணடிப்பதுண்டு. ஆம்! அப்படி நேரத்தை வீணடிக்காமல் இருப்பதற்கும், நல்லொழுக்கத்தை மேன்மேலும் வளர்த்துக் கொள்வதற்கும், இன்னும் பற்பல நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் சிறந்த வழி அறநெறிப் பாடசாலைக்குச் செல்வதே.

"நன்றே செய் அதையும் இன்றே செய்" என்பது ஓர் முதியோர் வாக்கு. நாளை என்பது நிச்சயமில்லை. எனவே எந்தக் காரியத்தையும் காலத்தே செய்வது நன்று. காலம் போனபின் நேரம் இல்லையே என்று வருந்துவது மடமை. எனவே எதையும் நல்லதாகச் செய்வோம். அதிலும் காலத்தே செய்வோம். வாழ்வில் உயர்வோம். இது போன்ற நல்ல விடயங்களை அறிந்து கொள்ள இனிதான வழி அறநெறிப் பாடசாலை என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை. இப்பாடசாலையின் மூலம் மாணவர்களுக்கு அதிக நன்மைகள் உண்டு. எம் வாழ்க்கைக்கு அறநெறியே மிக மிக அவசியமாகும்.

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்கிறது திருக்குறள். ஆம்! குறள் கூறுவதைப் போன்று கற்ற கல்வியை நன்றாகக் கற்று, அதன்படி ஒழுகுதல் எமது கடமையாகும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

- மனோகரன் பத்மினி, தரம் 11

---

உலகில் வாழும் உயிர்களுக்குத் தொண்டு செய்வதைக் காட்டிலும் சிறந்த அறம் வேறு இல்லை.

இதய பூர்வமான காரியங்களைச் செய்பவனுக்கு இறைவனும் உதவி புரிகின்றான். உன்னால் இயன்ற வரையில் நற்செயல்களைச் செய்.

உண்மை பேசு, எல்லோரையும் நேசி, உன் காரியங்களிலெல்லாம் நேர்மையாக இரு, உனக்கு தெய்வ தரிசனம் கிடைக்கும்.

தூய்மையாக இருப்பதும், மற்றவர்களுக்கு நன்மை செய்வதும்தான் வழிபாடுகளின் சாரமாகும்.

பிறருக்காகச் செய்கின்ற சிறிய செயல் கூட நம்முள் ஆற்றலை வளர்க்கின்றது. நம்மை சிங்கத்தை ஒத்த வீரர்கள் ஆக்குகின்றது.

– *சுவாமி விவேகானந்தர்*

# அன்னை சாரதாதேவி

தூய அன்னை என அழைக்கப்படும் ஸ்ரீசாரதாதேவி ஸ்ரீராமகிருஷ்ணரின் மனைவியும் அவரது முதல் சிஷ்யையும் ஆவார். முன்னர் தோன்றிய இராமர், கிருஷ்ணர், புத்தர் போன்ற அவதார புருஷர்களின் மனைவியரைப் போலன்றி ஸ்ரீசாரதாதேவி ஓர் ஏழைக் குடும்பத்தில் ஆனால் பண்பட்ட அந்தணர் குடும்பத்தில் பிறந்தார். இவர் பிறந்த ஊர் கல்கத்தாவிற்கு மேற்கே அறுபது மைல் தொலைவில் உள்ள ஜெயராம்பாடி என்ற கிராமத்தில் 1853ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ம் திகதி இராமசந்திர முகர்ஜிக்கும் சியாமாசுந்தரி தேவிக்கும் முதற் குழந்தையாக அவதரித்தார்.

நாட்டுப் புறத்தில் வளரும் மற்றப் பெண் குழந்தைகளைப் போன்று இளைய குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளுதல், மாடுகளைப் பேணுதல், வயலில் வேலை செய்யும் தந்தைக்கும் மற்றவர்களுக்கும் உணவு கொண்டு செல்லல் போன்ற வீட்டு வேலைகளில் இவருடைய இளமைப் பருவம் கழிந்தது. பொம்மைகள் செய்து விளையாடுவதோடு, காளி, இலட்சுமி தேவியரை மலர்களால் அலங்கரித்துத் தியானிப்பது இவருடைய பொழுதுபோக்காக இருந்தது.

சாரதைக்கு ஐந்து வயதாக இருக்கும் போது இவர் இராமகிருஷ்ணரின் வாழ்க்கைத் துணைவியானார். ஐந்து வயதே நிரம்பிய அன்னைக்கும் இருபத்து மூன்று வயது இளைஞராகிய இராமகிருஷ்ணருக்கும் நடந்த இந்த வினோதத் திருமணம் இறைவனின் திட்டம் என்றுதான் கூற வேண்டும்.

பதின்நான்கு வயதை சாரதை அடைந்த பொழுது இராமகிருஷ்ணருடன் சில நாட்கள் இருக்கும் வாய்ப்புக் கிட்டியது. பின்பு ஒருநாள் கங்கையில் நீராடச் சென்ற பொழுது கிராமத்து வம்புப் பேச்சுகளின் வாயிலாக இராமகிருஷ்ணருக்குப் பைத்தியம் பிடித்துவிடடது எனக் கேள்வியுற்ற அன்னை சாரதா அவர் வசித்துவந்த தட்சிணேஸ்வரம் ஆலயத்திற்குச் சென்றார். தட்சிணேசுவரம் அடைந்த சாரதையை இராமகிருஷ்ணர் அன்போடு வரவேற்றார். ஊரார் அவரைப் பற்றி கதைத்தது உண்மையல்ல என சாரதை உணர்ந்தாள்.

இராமகிருஷ்ணருக்குச் சேவை செய்ததன் மூலமாகவும் இராமகிருஷ்ணரால் அளிக்கப்பட்ட பயிற்சிகளாலும் சாரதை பொறுமையின் அவதாரமாகவும், அமைதியே வடிவெடுத்தவராகவும், எளிமையும் அடக்கமும் உடையவராகவும், அன்பின் சிகரமாகவும், அனைவரையும் அணைக்கும் தாய்மைக் குணம் மிக்கவராகவும் உருவெடுத்தார். அவரை அறிந்த அனைவரும் அவரது சீரிய பண்புகளால் கவரப்பட்டனர். அன்னை சாரதை என அழைக்கப்பட்டார்.

சாரதை தட்சிணேஸ்வரத்தில் 'நகபத்' என்ற சிறிய அறையில் தங்கியிருந்தார். அது அவர் வசிக்கும் அறையாக மட்டுமன்றி பொருட்களை வைக்கவும் சமையல் செய்யவும், விருந்தினர்களை வரவேற்று உபசரிப்பதற்கும், ஏனைய

தேவைகளுக்கும் பயன்பட்டது. வேறொருவர் அப்படிப்பட்ட அறையில் வசித்திருக்கவே மாட்டார். தினசரி இராமகிருஷ்ணரின் அறையைச் சுத்தப்படுத்தவது, துணி துவைப்பது போன்ற வேலைகளையும் அன்னை சாரதை கவனித்துக் கொள்வார். இராமகிருஷ்ணரிடம் வரும் பக்தர்களுக்குச் சேவை செய்வதிலும் ஆன்மீக சாதனையிலும் அன்னையின் நேரம் கழிந்தது.

இராமகிருஷ்ணரிடம் அன்னை பெற்றது ஆன்மீகப் பயிற்சி மட்டுமன்றி அன்றாடம் நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் பற்றியும், அன்றாட வாழ்வில் எப்படி மற்றவர்களிடம் நடந்து கொள்வது, வீட்டில் எந்தெந்தப் பொருட்களை எங்கெங்கே வைப்பது போன்றவற்றையும் தான். அடிக்கடி பயன்படும் பொருட்களைக் கைக்கு எளிதில் எட்டும் இடத்தில் வைத்துக் கொள்வது; அரிதாக தேவைப்படும் பொருட்களைத் தூரத்தில் வைப்பது; ஒரு பொருளை எடுத்தால் மீண்டும் அதே இடத்தில் வைப்பது; மக்களின் மனநிலை, இடம், காலம், சூழ்நிலை, பழக்க வழக்கங்கள் இவற்றை எல்லாம் அறிந்து, அனுசரித்து எல்லோருடனும் நடந்து கொள்வது; நண்பர்களைத் தேர்ந்தெடுக்கும் போதும், ஒருவருடன் பழக்கம் வைத்துக் கொள்ளும் போதும் மிகுந்த கவனத்துடன் இருப்பது; அன்றாட வாழ்வில் பிறருடன் எப்படிப் பழகுவது என்பதையும் அன்னைக்கு இராமகிருஷ்ணர் புகட்டினார்.

இந்த தெய்வீகத் தம்பதிகளின் வாழ்க்கையில் நடந்த மறக்க முடியாத மற்றொரு சம்பவம், அம்பிகைக்குரிய பீடத்தில் சாரதையை அமர்த்தி அண்ட சராசரங்கள் அனைத்தையும் ஈன்ற அன்னை பராசக்தியாகவே பாவனை செய்து, பூஜை செய்து இராமகிருஷ்ணர் வழிபட்டதாகும்.

ஒருமுறை அன்னை கொல்கத்தாவிற்கு பயணம் செய்து கொண்டிருக்கும் பொழுது இராமகிருஷ்ணரின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. மற்றவர்கள் உதவியின்றி சிறிதும் நகர முடியாத நிலையில் இருந்தார். இரண்டு நாட்கள் உணவின்றி தண்ணீர் இன்றி இறைவனிடம் இராமகிருஷ்ணரின் நலம் வேண்டி பிரார்த்தித்தார். இவ்வேளை காளிதேவியின் காட்சி கிடைத்தது. காளியின் கழுத்து வளைந்திருப்பதைக் கண்ட அன்னை ஏன் இவ்வாறு நிற்கிறீர்கள் என்று கேட்க, புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஸ்ரீ இராமகிருஷ்ணரின் தொண்டையைச் சுட்டிக்காட்டி இதனால் தான் என் கழுத்து இப்படி இருக்கிறது என்று காளிதேவி கூறினாள். இவ்வாறான காட்சிகள் வரப்போகும் இராமகிருஷ்ணரின் மரணத்திற்கு அன்னையை ஆயத்தப்படுத்தின.

1886ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி இராமகிருஷ்ணர் தம் பூதவுடலை உகுத்தார். இரண்டு வாரங்களின் பின் துன்பத்தைத் துடைப்பதற்காகவும், புனித யாத்திரை செய்வதன் பொருட்டும் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இராமகிருஷ்ணரின் சீடர்கள் பலரும், உறவினர் சிலரும் அன்னையுடன் சென்றனர். பிருந்தாவனத்தில் அன்னையின் வாழ்க்கை பூஜை, தியானம், ஆன்மீக அனுபவம் நிறைந்ததாக அமைந்தது. இராதாரமணரின் கோவிலுக்குச் சென்று

உள்ளமுருகி "ஓ இறைவா, மற்றவர்களின் குறையைக் காணும் வழக்கத்தை என்னிடமிருந்து நீக்கிவிடு. நான் என்றுமே பிறரிடம் குற்றம் காணாமல் இருக்க அருள் செய்" என்று வேண்டிக் கொண்டார்.

இராமகிருஷ்ணர் இருந்த காலத்திலேயே அன்னையின் ஆன்மீகப் பணி ஆரம்பித்துவிட்டது. இராமகிருஷ்ணரை நாடி வந்த பெண்கள் அன்னையைச் சுற்றிக் கூடினர். வேறுபாடின்றி அனைவரிடமும் பாசத்தையும், அன்பையும், இரக்கத்தையும் பொழிந்ததால் அவரது சீடர்களின் எண்ணிக்கை பெருகியது. கடவுளின் தாய்மை எப்படிப்பட்டது என்பதை நடைமுறையில் வாழ்ந்து காட்டு-வதற்காகவே இராமகிருஷ்ணர் அன்னையை உருவாக்கிச் சென்றிருக்கிறார்.

உலகத்தை அணைக்கும் பரந்த அன்பு இறைவனின் தன்மையெனில், அப்பண்பு அன்னையிடம் பூரணமாக வெளிப்பட்டதை அனைவரும் அறிவார்கள். தாயொருத்தி தனது குழந்தையின் பலவீனத்தைப் பாராமல் அன்பு செலுத்து-கிறாள். அதைப் போலவே, அன்னையும் தன்னிடம் வந்த அனைவரையும் அவர்-களது தகுதிகளையும், தகுதியின்மையையும் கருதாமல் ஏற்றுக்கொண்டார்.

1919ம் ஆண்டின் இறுதியிலிருந்து அன்னையின் உடல் ஆரோக்கியம் குன்றியது. அவரைக் காண ஏராளமான சீடர்கள் வந்தனர். வந்தவர்களைப் பார்த்து 'வாழ்க்கையில் உனக்கு அமைதி வேண்டுமென்றால் மற்றவர்களின் குறைகளைப் பார்க்காதே'. 'குறை காண விரும்பினால், மற்றவர்களின் குறை-களுக்குப் பதிலாக, உன்னிடம் இருக்கும் குற்றங்களைப் பார்'. 'இந்த உலகம் முழுவதையுமே உன்னுடைய சொந்தமாக்கிக் கொள்ளக் கற்றுக் கொள். உலகில் யாரும் அந்நியர் இல்லை. இந்த உலகம் முழுவதுமே உன் சொந்தம் தான்' என்றார். இதுவே அன்னை உலகிற்குத் தந்த கடைசி உபதேசம் ஆகும். அன்னையின் பூதவுடல் மறைந்த 1920ம் ஆண்டு வரை அன்னை அரிய பெரிய ஆன்மீகப் பணிகளை மேற்கொண்டார்.

அன்னை சாரதையின் கள்ளங்கபடமற்ற தன்மை கல்நெஞ்சத்தினரையும் உருக்குவதாக இருந்தது. அவரது பரந்த அன்பு தகுதியுடையவர்கள், தகுதி-யற்றவர்கள் என்ற வேற்றுமை பாராட்டியதே இல்லை. உலக மக்களையே தாயன்பினால் அணைத்துக் கொண்ட பரந்த இதயம் உடையவர் அன்னை. மக்களின் நன்மைக்காக உழைப்பதையும் கஷ்டப்படுவதையும் பேறாகக் கருது-கின்ற மனப்பான்மை படைத்திருந்தார். இவ்வாறு நாமும் நல்ல பண்புகளைக் கடைப்பிடித்து வாழ்வில் முன்னேறுவோமாக.

- பொன்னம்பலம் அகிலா, க.பொ.த. உயர்தரம்

சுயநலமே ஒழுக்கக் கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இதுவே ஒழுக்கத்திற்கு நாம் கொடுக்கக் கூடிய ஒரே இலக்கணமாகும்.

- *சுவாமி விவேகானந்தர்*

# தசாப்தத்தில் ஒரு வளர்ச்சி

நவீனமயச் சிந்தனைகள் தழைக்கும் இக்காலம்
இறை சிந்தனை மறையும் பொல்லாக் காலம்
வாரத்தில் ஒரு நாள் இருள் அகற்றி
இறையொளி பரப்பும் நம் அறநெறி!

சொல்ல முடியாத வேதனைகளும் சோதனைகளும்
இளைஞனிடம் பொறுமை வைத்து, ஊக்கமும் அளித்து
உடலுக்கு உறுதி அளித்து, மனத்திற்கு தியானம் அளித்து
சாதனைகள் நிகழ்த்த வைக்கும் நம் அறநெறி!

அன்பிற்கு ஓர் ஆலயமாய், பண்பிற்கு ஓர் இருப்பிடமாய்
நமையாளும் ஈசன் கொடுத்த வரம் நம் அறநெறி!
காலங்கள் உருண்டோட, பத்து ஆண்டுகள் அல்ல
நூறாண்டுகள் பலவும் கொண்டாடும் நம் அறநெறி!

- இராமகிருஷ்ணர் விவேக், தரம் 10

## பாராட்டுப் பெறும் அறநெறிப் பாடசாலை மாணவர்கள்

பின்வரும் மாணவர்கள் இந்த மலருக்காக ஆக்கங்களைத் தந்திருந்தாலும் இட வசதி, ஒரே தலைப்பு போன்ற காரணங்களால் அவை மலரில் இடம் பெறவில்லை. இந்த மாணவர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

கட்டுரைகள் ஆக்கியோர்:

| | | | |
|---|---|---|---|
| S. மயூரன் (தரம் 11) | R. வாணிதரன் (தரம் 11) | S. சிந்துஜன் (தரம் 11) | த. யகேந்ரநாத் (தரம் 10) |
| P. பாஸ்கரன் (தரம் 9) | K. தனுஷன் (தரம் 8) | ச. கஜேந்திரன் (தரம் 8) | K. பிரகாஷ் (தரம் 8) |
| S. அமர்நாத் (தரம் 8) | K. சுரேஸ்குமார் (தரம் 8) | P. கார்த்தீபன் (தரம் 8) | Y. தர்மசீலன் (தரம் 8) |
| S. ஆனந்தன் (தரம் 8) | N. சரத்குமார் (தரம் 9) | P. நவீன்குமார் (தரம் 8) | K. லிக்ஷன் (தரம் 7) |
| P. சிவா (தரம் 7) | T. மனோஜ் | S. தனுசன் | K. ஜனகா (தரம் 7) |
| கு. இலக்சுமி (தரம் 10) | J. சாய்வாசினி (தரம் 10) | S. சிந்துஜா (தரம் 10) | R. சூரியகலா (தரம் 10) |
| A. சாலினி (தரம் 10) | T. லாவன்யா (தரம் 10) | V. சோஷன்யா (தரம் 10) | ச. கோபிகா (தரம் 8) |
| S. சில்பா (தரம் 8) | T.V. சத்திகா (தரம் 8) | வ. சந்திரிக்கா (தரம் 7) | T. சுகன்யா |

கவிதைகள் ஆக்கியோர்:

| | | | |
|---|---|---|---|
| த. மங்களவாரர் (தரம் 10) | P. திவ்யராஜ் (தரம் 9) | த. சசிந்ரநாத் (தரம் 9) | K. தேவகரன் (தரம் 9) |
| ச. கஜேந்திரன் (தரம் 8) | ச. பிரதீப்குமார் (தரம் 8) | N. நிதர்சன் (தரம் 8) | |

சித்திரம் வரைந்தோர்:

ச. பிரதீப்குமார் (தரம் 8) ரம்யா (தரம் 2)

* * * * * * * *

# இந்து சமய மறுமலர்ச்சிக்கு சுவாமி விவேகானந்தர் ஆற்றிய சேவை

நமது வாழ்வில் நாம் வெற்றியடைய வேண்டுமானால், வெற்றியைப் பற்றிய நம்பிக்கை, அதைப் பற்றிய ஆழமான சிந்தனை, அதற்கான கடுமையான விடாமுயற்சி இவைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்திருந்தால் நிச்சயமாக நாம் எக்காரியம் ஆனாலும் வெற்றியை அடைய முடியும். இதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவர்தான் சுவாமி விவேகானந்தர்.

சுடர் விளக்காயினும் நன்று விளங்கிட தூண்டுகோல் ஒன்று வேண்டும் என்பதற்கேற்ப அறிவாற்றலிலே சிறந்து விளங்கிய சுவாமி விவேகானந்தரை ஆன்மீக அறிவும் சேர்ந்து சுடர் விட்டு எரிய வைத்தவர் ஸ்ரீ இராமகிருஷ்ணர் அவர்களே. துள்ளித்திரிய வேண்டிய இளம் பதினெட்டு வயதிலே ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அறிவு நிரம்பிய ஆழமான தத்துவக் கருத்துக்களைக் கேட்டு அவரின் சீடராகவே மாறியவர்தான் சுவாமி விவேகானந்தர். ஆலயங்களில் உள்ள சிலைகளில் இறைவனைக் காணும் நாம், ஏனைய மனிதர்களிடத்திலும் இறைவனைக் காண முடியும்; அவர்களுக்குச் சேவை செய்வதன் மூலம் அதை இறைவனுக்கே செய்த சேவை என எமதுள்ளம் எண்ணிட வேண்டும்; மக்கள் சேவையை, பொருளாதார நோக்கோடு பார்க்காது சாதனை, மனநிறைவு, சமுதாய வளர்ச்சி என்ற கோணங்களிலே பார்க்கும்போது தான் சேவையின் உண்மையான மகிழ்ச்சியை உள்ளத்தால் உணரமுடியும்; மக்கள் சேவையே மகேசன் சேவை; இப்படியான சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட விவேகானந்தர், ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சீடரானதில் ஆச்சரியம் இல்லையே!

எனது அன்புக்குரியவர்களே! எமக்கு கல்வி அறிவோடு பேச்சாற்றலும், தெளிந்த அறிவும், ஆழமான அன்பு செலுத்தும் மலர்போன்ற மனமும் அத்தோடு துணிவும் இருக்குமானால் எம்மாலும் எதையும் சாதித்திட முடியும் என்பதை உங்கள் ஆழ்மனதில் ஆழப்பதித்து வைத்துக் கொள்ளுங்கள். இவை அனைத்துடனும் ஆன்மீக அறிவும் நிறைந்து பெற்றதால்த்தான் குறுகிய காலத்திலேயே அதுவும் துடிப்பான இளம் வயதிலேயே சுவாமி விவேகானந்தரால் வானுயர வளரமுடிந்தது. 1886ம் ஆண்டு உலகிற்கு ஆன்மீகத்தையும் மக்கள் சேவையின் மகத்துவத்தையும் வாரி வழங்கிய இராமகிருஷ்ணர் மறைந்தார். அன்றுவரை நரேந்திரன் என்ற பெயரில் வாழ்ந்தவர், சீடர் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்றதன் பின் துறவு வாழ்வை ஏற்று, தனது பெயரை விவேகானந்தர் என மாற்றிக் கொண்டார்.

அதன் பின் இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்றார். மக்கள் படும் இன்னல்களையும் வறுமையையும் கண்டு மனம் வெதும்பினார், அறிவாற்றலோடு, பேச்சாற்றலும், ஆன்மீக அறிவும் கொண்ட சுவாமி அவர்கள் மக்களின் மனங்களை இலகுவாகக் கவர்ந்தார். சுவாமி விவேகானந்தர் சுதந்திர

உணர்ச்சியோடும், துணிவுடனும், மதநம்பிக்கையுடனும் உழைத்தால் வாழ்வில் நிச்சயம் உயர முடியும் என்பதை வலியுறுத்தி பல சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். எங்கு சென்றாலும் 'எழுமின்! விழிமின்! குறிக்கோளை அடையும் வரை ஓயாது உழைமின்!!' எனத் தனது பேச்சாற்றலால் மக்களைத் தட்டி எழுப்பினார். சோம்பலாகக் கிடந்த மக்களை வீறு கொண்டு எழச் செய்தார். நமது சமயம் நன்கு சிறந்து விளங்கிட வேண்டுமானால் முதலில் சமூகம் ஒற்றுமைப்படல் வேண்டும் என்பதையும் கூற மறந்துவிடவில்லை.

அக்காலத்தில் அனேகமானவர்கள் மேல் நாட்டு நாகரீகத்தில் ஊறிக் கிடந்ததைக் கண்டார். இதன் விளைவால் மேல்நாட்டு மதங்களைப் பின்பற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இந்து சமயத்தின் சிறப்புக்களையும், அதன் ஆன்மீகச் செய்திகளையும் உணர வைக்க அரும்பாடுபட்டார். 1893ம் ஆண்டு அமெரிக்காவில் அகில உலக சமய மாநாடு நடைபெறவிருப்பதை அறிந்து, அம்மாநாட்டிலே இந்தியாவிலிருந்து, இந்து சமயம் சார்பாக எவருமே கலந்து கொள்ளவில்லை என்பதையறிந்து மனம் வருந்தினார். மாற்று மதத்தவர் தம்தம் மதங்களின் சிறப்புக்களைப் பற்றி கூறும் போது, உலகத்திற்கே சமயத்தின் மூலம் ஆன்மீகத்தின் சிறப்புக்களைக் கற்றுத் தந்த இந்தியாவிலிருந்து ஒருவர் கூடக் கலந்து கொள்ளவில்லை என்றால் அது இந்து சமயத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே பெரும் இழுக்கு என்பதை உணர்ந்தார். அதன் விளைவு சுவாமி விவேகானந்தரே அதில் கலந்து கொள்வதாக முடிவெடுத்தார்.

அமெரிக்காவிலே சிக்காகோ நகரிலே கொலம்பஸ் மண்டபத்திலே, சுவாமிஜியின் முதற் சொற்பொழிவு நிகழ்ந்தது. அதுவும் எப்படி? அமெரிக்கா வரலாற்றிலே அன்றுவரை 'Ladies and Gentleman' என்றே பேச்சாளர்கள் தமது பேச்சை ஆரம்பிப்பது வழக்கம். ஆனால் சுவாமிஜி அவர்கள் 'My Dear Sisters and Brothers' எனப் பேச ஆரம்பித்தது, அங்கிருந்த அனைவரையும் அவர்பால் ஈர்த்து விட்டது. மண்டபத்திலிருந்த அனைவரும் தம்மை மறந்து நீண்ட நேரம் கைதட்டியதுடன், அவரது பேச்சைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்துவிட்டார்கள். சுவாமிஜி அவர்களின் ஆங்கிலப் புலமையும் அமெரிக்கர்களை அசர வைத்தது. இளம் வயதிலேயே தலைப்பாகையுடன் கூடிய எடுப்பான தோற்றமும், அறிவு நிறைந்த துடிப்பான விழிகளும், ஆங்கிலப் பேச்சாற்றலும் அமெரிக்க மக்களை ஆட்கொண்டதில் சந்தேகமில்லையே!

சுவாமி விவேகானந்தர் இந்து தர்மத்தின் சிறப்புகளையும் ஆன்மீக உயர்வுகளையும் பற்பல சான்றுகளுடன் மிக விளக்கமாகவும், ஆழமாகவும் எடுத்தியம்பியது அனைவரையும் கவர்ந்தது. அமெரிக்கப் பத்திரிகைகள் அனைத்துமே சுவாமிஜியின் சொற்பொழிவுகளுக்கு முன்னுரிமை கொடுத்து அவற்றை முதற் பக்கத்திலேயே வெளியிட்டிருந்தன. சுவாமி விவேகானந்தரின் புகழ் அமெரிக்கா முழுவதுமே பரவியது. அதன் பயனாக அமெரிக்க மக்களின் ஒத்துழைப்புடன் சாந்தி ஆச்சிரமம் ஒன்றை ஏற்படுத்தி, பல மாதங்கள் அவர்களுக்கு இந்து சமயத்தின் ஆன்மீகச் சிறப்புக்களைப் போதித்தார்.

சுவாமிஜி அமெரிக்காவுடன் நின்றுவிடாது சுமார் மூன்று ஆண்டுகள் வரை லண்டன் மற்றும் ஐரோப்பா நாடுகள் முழுவதுமே சுற்றுப் பயணம் செய்து இந்து சமயத்தின் சிறப்புகளைப் பற்றி சொற்பொழிவு ஆற்றினார். இதன் மூலம் வேற்று மதத்தைச் சேர்ந்த பலர், சுவாமி விவேகானந்தருடன் இணைந்தனர். இவர்களில் மாகிரட்நோபிள், கப்டன் சேவியர், திருமதி சேவியர், குட்வின் முதலியோர் சுவாமிஜியின் சீடர்களாகி முழுநேரப் பணியாற்றினார்கள். இதன் மூலமாக இந்து சமயத்தின் சிறப்புகள் உலகம் முழுவதும் தெரிந்திட வழியேற்பட்டது எனலாம். இவர்களிலே மாகிரட்நோபிள் என்ற அமெரிக்கப் பெண்மணி தனது பெயரை சகோதரி நிவேதிதை என மாற்றிக் கொண்டு இந்தியா வந்து இறுதிவரை மக்களுக்காகத் தொண்டு செய்து இந்தியாவிலேயே தனது இறுதிப் பயணத்தை முடித்துக் கொண்டார்.

இலங்கைக்கு மூன்று முறை வந்த சுவாமிஜி, 1897ம் ஆண்டு ஜனவரி மாதம் வந்தபோது, கொழும்பு, கண்டி, அனுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம் உட்பட பல இடங்களுக்குச் சென்று சொற்பொழிவு ஆற்றினார். சுவாமிஜியின் இலங்கைப் பயணங்களின் விளைவாக 1902ம் ஆண்டு கொழும்பில் இந்துக்கள் ஒன்றிணைந்து விவேகானந்த சபையை நிறுவினர்.

1897ல் சுவாமி விவேகானந்தர் அவர்கள், 'மக்களின் மேம்பாட்டிற்குச் சேவை', 'துறவிகளுக்கு ஆன்ம ஈடேற்றம்' எனும் இரட்டைக் குறிகோள்களுடன் துறவிகளின் சங்கமாக 'இராமகிருஷ்ண மிஷனை' கொல்கத்தாவில் நிறுவினார். இலங்கையில் இராமகிருஷ்ண மிஷனின் முதலாவது கிளை 1925ல் திருகோணமலையில் தாபிக்கப்பட்டது. இன்று கொழும்பிலும், மட்டக்களப்பிலும் உள்ள இராமகிருஷ்ண மிஷனின் கிளைகள் மிகவும் சிறப்பாக பொதுப் பணிகளைச் செய்து வருகின்றது. சுவாமிஜியின் இலங்கை வரவை நினைவுகூரும் வகையில் இலங்கை அரசால் நினைவு முத்திரை 1997ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதன் மூலம் தன் பெயரையும் இலங்கை உயர்த்திக்கொண்டது.

சுவாமி விவேகானந்தர், காந்தி, இப்படியாக எமக்கு நல்வழிகாட்டிய சிறந்த ஆன்மீகவாதிகள், பெரியார்கள் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். இவர்களால் உளரீதியாக நாம் எந்தளவுக்கு உயர்ந்திருக்கிறோம்? நமது சமுதாயம் எந்தளவுக்கு உயர்ந்திருக்கிறது? நாம் சமுதாயத்திற்காக என்ன செய்யப்போகிறோம் என்பதே இன்றைய கேள்வி. இளம் மாணவ சமூகமாக இருக்கும் நாமாவது விவேகானந்தர் காட்டிய வழியில் சென்று சமுதாயத்திற்கு ஏதோ ஒரு வகையில் சேவை செய்வதே நாம் சுவாமி விவேகானந்தருக்குச் செய்யும் பெரிய கைமாறாக இருக்க முடியும் என்பதை இவ்வேளையில் கூற விரும்புகிறேன்.

- செல்வநாயகம் செல்வமதி - க.பொ.த. உயர்தரம்

**மணிக்கணக்கில் நிறையப் பேசுவதைக் காட்டிலும் சிறிதளவு காரியங்களைச் செய்வதே மேலானது.**
*- சுவாமி விவேகானந்தர்*


# ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலையின் முக்கிய நிகழ்வுகள்

1998.02.10: தைப்பூசத் திருநாளன்று ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலை சமய சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

| *திகதி* | *நிகழ்ச்சி* | *பிரதம விருந்தினர்* | *சிறப்பு விருந்தினர்* |
|---|---|---|---|
| 1999.04.10 | 1ஆவது ஆண்டுவிழா<br>ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி | ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜி<br>(தலைவர், இலங்கை இராமகிருஷ்ண மிஷன்) | திரு. ந. மன்மதராஜன்<br>(அதிபர், கொழும்பு இந்துக் கல்லூரி) |
| 1999.09.04 | ஆன்மிகக் கண்காட்சி<br>கிருஷ்ண ஜெயந்தி | ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தஜி<br>(கொழும்பு இராமகிருஷ்ண மிஷன்) | திரு. ந. மன்மதராஜன்<br>(அதிபர், கொழும்பு இந்துக் கல்லூரி) |
| 2000.05.20 | 2ஆவது ஆண்டுவிழா<br>ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி | ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜி<br>(தலைவர், இலங்கை இராமகிருஷ்ண மிஷன்) | திரு. ந. மன்மதராஜன்<br>(அதிபர், கொழும்பு இந்துக் கல்லூரி) |
| 2000.09.09 | ஆன்மிகக் கண்காட்சி<br>கிருஷ்ண ஜெயந்தி | திருமதி அ. கைலாசபிள்ளை<br>(சமூக சேவையாளர்) | ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜி<br>(தலைவர், இலங்கை இராமகிருஷ்ண மிஷன்) |
| 2001.06.07 | 3ஆவது ஆண்டுவிழா<br>ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி | வைத்தியர் கலைவாணி பிள்ளை<br>(மகரகமை புற்றுநோய் வைத்தியசாலை) | ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தஜி<br>(கொழும்பு இராமகிருஷ்ண மிஷன்) |
| 2001.09.15 | ஆன்மிகக் கண்காட்சி<br>கிருஷ்ண ஜெயந்தி | ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜி<br>(தலைவர், இலங்கை இராமகிருஷ்ண மிஷன்) | செல்வி வ. கணபதிப்பிள்ளை<br>(செயலாளர், ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சமிதி) |
| 2002.04.05 | 4ஆவது ஆண்டுவிழா<br>ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி | திரு. திருமதி மார்க்கண்டு | திரு. டி. எம். இராமகிருஷ்ணர் |
| 2002.09.21 | ஆன்மிகக் கண்காட்சி<br>கிருஷ்ண ஜெயந்தி | திரு ஆர். தர்மகுலசிங்கம்<br>(வன்னிப் புனர்வாழ்வு அமைச்சு) | ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தஜி<br>(கொழும்பு இராமகிருஷ்ண மிஷன்) |
| 2003.08.02 | 5ஆவது ஆண்டுவிழா<br>ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி | வைத்தியர் நிர்மலா பெஞ்சமின்<br>(கொழும்பு தேசிய வைத்திசாலை) | திருமதி. பரஞ்சோதி பாக்கியராஜா<br>(அதிபர், கின்ஸ்ரன் கல்லூரி) |
| 2003.09.13 | ஆன்மிகக் கண்காட்சி<br>கிருஷ்ண ஜெயந்தி | திரு வி. சுப்பிரமணியம்<br>(தலைவர், மொறட்டுவை இந்து மன்றம்) | ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜி<br>(தலைவர், இலங்கை இராமகிருஷ்ண மிஷன்) |
| 2004.03.20 | 6ஆவது ஆண்டுவிழா<br>ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி | திரு. ந. மன்மதராஜன்<br>(அதிபர், கொழும்பு இந்துக் கல்லூரி) | ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தஜி<br>(கொழும்பு இராமகிருஷ்ண மிஷன்) |
| 2004.09.25 | ஆன்மிகக் கண்காட்சி<br>கிருஷ்ண ஜெயந்தி | திரு. யு. நவரட்ணம்<br>(பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவனம்) | திரு. ந. மன்மதராஜன்<br>(அதிபர், கொழும்பு இந்துக் கல்லூரி) |
| 2005.08.21 | 7ஆவது ஆண்டுவிழா<br>ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி | ப்ரவ்ராஜிக சுசந்தப்ராணா மாதாஜி<br>(ஸ்ரீ சாரதா மடம், இந்தியா) | திருமதி எ. மன்மதராஜன்<br>(ஆசிரியர், கொழும்பு இந்துக் கல்லூரி) |
| 2006.05.20 | 8ஆவது ஆண்டுவிழா<br>ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி | திரு. டி. மனோகரன்<br>(நீதிமன்றப் பதிவாளர், கொழும்பு) | ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தஜி<br>(கொழும்பு இராமகிருஷ்ண மிஷன்) |
| 2007.05.05 | 9ஆவது ஆண்டுவிழா<br>ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி | ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தஜி<br>(தலைவர், இலங்கை இராமகிருஷ்ண மிஷன்) | செல்வி வ. கணபதிப்பிள்ளை<br>(பொருளாளர், இராமகிருஷ்ண சாரதா மிஷன்) |
| 2007.09.22 | ஆன்மிகக் கண்காட்சி<br>கிருஷ்ண ஜெயந்தி | ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தஜி<br>(தலைவர், இலங்கை இராமகிருஷ்ண மிஷன்) | திரு. ந. மன்மதராஜன்<br>(அதிபர், கொழும்பு இந்துக் கல்லூரி) |
| 2007.05.05 | 10ஆவது ஆண்டுவிழா<br>ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி | ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தஜி<br>(தலைவர், இலங்கை இராமகிருஷ்ண மிஷன்) | திரு. ந. மன்மதராஜன்<br>(அதிபர், கொழும்பு இந்துக் கல்லூரி) |

* * * * * * * *


ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப் பாடசாலை மாணவிகள்
24.02.2007


SRI RAMAKRISHNA RELIGIOUS SCHOOL
RATMALANA